அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. து. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சார்ந்த வைத்தீஸ்வரன் கோயில், கொள்ளிடம், பெருந்தோட்டம் போன்ற இடங்களில் எல்லாம் 10 வருடங்களுக்கு முன்னால் பவுண்ட் இருந்தது. பவுண்ட் இருந்த காலங்களில் அங்கு விவசாயம் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டது. ஆனால், தற்போது பவுண்டு இல்லை ஆதலால் அங்கு பயிர் செய்யும் விவசாயப் பொருள்களை ஆடுகள், மாடுகள் நாசம் செய்கின்றன. எனவேதான் அன்பு கூர்ந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் விவசாயிகளுடைய நலன்கள் கருதி அங்கே பவுண்டு அமைத்து கொடுத்தால் பயிர்கள் நாசம் செய்வதைத் தடுக்க முடியும். அதன் மூலம் அரசுக்கும் வருமானம் வரும். மேலும், ஒருவருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம், அதாவது அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஒருவர் வேலை வாய்ப்பு பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, விவசாயிகளுடைய நலன் கருதி இந்த நிதி ஆண்டில் இதைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்படி 17,720 கிராமங்கள் இருந்தாலும், கால்நடை பட்டிகள் தொன்று தொட்டு பல ஆண்டுக்காலமாக 3,484 தான் இருக்கிறது. அதில் ஏறக்குறைய 431 தான் நல்ல நிலையில் உள்ளது. பழுது அடைந்தவைகளை பழுது பார்ப்பதற்காக அரசு உத்தேசித்துக் கொண்டிருக்கிறது. இதற்கு தனியாக நிதி வேண்டும் என்று கேட்கப்பட்டிருக்கிறது. நிதி நிலைமைக்கு ஏற்றவாறு அவைகள் செய்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 142, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

142—

விருத்தாசலம் நகரில் பெண்களுக்கென்று தனிக் கல்லூரி அமைத்தல்.

*9500—திரு. ஆர். டி. அரங்கநாதன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் பெண்களுக்கென்று தனிக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

1993 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எங்களுடைய விருத்தாசலம் நகரில் உள்ள அரசுக் கல்லூரியில் தற்போது பெண்களும் ஆண்களும் சேர்ந்து படித்து வருகின்றனர். அதனால் அங்கே பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பாக உள்ளது. மேலும் இட நெருக்கடியும் உள்ளது. இப்பொழுதே அந்தக் கல்லூரியில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். வரும் ஆண்டில் இன்னும் அதிகமான மாணவர்களும் மாணவிகளும் இந்தக் கல்லூரிக்கு வரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெண்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும் என்றும் எழுச்சி பெறவேண்டும் என்றும் எண்ணுகிற, பாரதி கண்ட புதுமைப் பெண் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே அங்கு பெண்களுக்காக தனியாக ஒரு கல்லூரியை அமைத்துக் கொடுத்தால், விருத்தாசலம், மங்களூர் உளுந்தூர் பேட்டை, திட்டக்குடி, நெய்வேலி போன்ற பகுதிகளிலிருந்து வரும் குடும்பப் பெண்களுக்கு படிப்பை முடிக்க அது அறிய வாய்ப்பாக அமையும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நம்முடைய ஆட்சிக் காலத்திலேயே அங்கே பெண்களுக்கென தனியாக ஒரு கல்லூரியை ஏற்படுத்தித் தர முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற தேவை பல்வேறு பகுதிகளிலே இருக்கிறது என்பதை அந்தந்தப் பகுதியைச் சார்ந்த நண்பர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் புதிதாக கலைக் கல்லூரிகளை ஆரம்பிக்கப் போவது இல்லை என்று நாம் ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கிறோம். மத்திய அரசைப் பொறுத்த வரையிலும் கல்விக் கொள்கையிலே கூட உயர் கல்வியைப் பொறுத்தமட்டில் அரசுப் பணத்தைச் செலவு செய்யக்கூடாது என்ற முடிவை அங்கே தேசிய அளவிலேயும் நாம் எடுத்திருக்கிறோம்.

முற்பகல் 10-05

திரு. ஆர். டி. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அந்தப் பகுதியிலே தனியார், ஒரு கல்லூரியை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களானால் அதற்கு அரசு அவர்களுக்கு அனுமதி அளிக்க முன்வருமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வருகின்ற போது அதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள். விருத்தாசலத்தைப் பற்றிய கேள்வி.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த அரசு பெண்கள் கல்லூரியைப் பற்றி There is one assurance given by our Chief Minister in the Assembly. அவர்கள் வாக்குறுதி அளித்திருக்கின்ற காரணத்தினாலே எங்கே வாக்குறுதி அளித்தார்களோ அந்த இடத்திலாவது இந்த அரசுக் கல்லூரியை அமைப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற இந்த பட்ஜெட்டில் 550 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்கு தெரியும். இந்தச் சூழ்நிலையில் நாம் புதிதாக கல்லூரி அரசின் சார்பிலே ஆரம்பிப்பது என்பது மிகவும் கடினமான ஒன்றாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 143, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

143—

மேனிலைப் பள்ளிகளில் வணிகவியல் பிரிவு ஏற்படுத்துதல்

*10563—திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல மேனிலைப் பள்ளிகளில் வணிகவியல் பிரிவு இல்லாத காரணத்தால் மாணவர்கள் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இப்பிரிவுகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் வணிகவியல் பாடத்தை உள்ளடக்கிய பாடப்பிரிவு துவக்க அனுமதி கோரும் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும் அனுமதி அளிக்கப்பட்டு வருகின்றது.